# உசிலம்பட்டி நகராட்சி
# நகர்மன்ற அவசர கூட்டம்
# நாள் 20.05.2022 நேரம் பிற்பகல் 4.00 மணி

**மன்றப்பொருள்: 1**

அரசாணை நிலை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள். 30.03.2022 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்.1, நாள். 01.04.2022 வழிகாட்டுதல்களின்படி இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 2 நாள். 11.04.2022–இல் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் 2022–2023 ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டு (01.04.2022) முதல் பொது சொத்துவரி / காலிமனையிடத்திற்கு சீராய்வு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரிக்கு மண்டல அடிப்படை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டமைக்கும், காலிமனையிடத்திற்கு 100 சதவிகிதம் வரி உயர்வு செய்தமைக்கும் ஆட்சபேணைகள் ஏதும்மிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ / நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ உசிலம்பட்டி நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு, பொது சொத்துவரி சீராய்வு குறித்து பொதுமக்கள் அறியும் வகையில் 13.04.2022 ஆம் நாளன்று இந்து தமிழிசை, மற்றும் தமிழ் சுடர் என்ற இரண்டு தமிழ் நாளிதழ்களிலும் Trinity Mirror என்ற ஆங்கில நாளிதழிலும், மாவட்ட அளவில் மற்றும் அலுவலக விளம்பர பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பொதுமக்கள், சுயநிதி பள்ளி கட்டிடங்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களிடமிருந்து பொது சொத்துவரி / காலிமனை சீராய்வு குறித்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் இவ்வலுவலகத்திற்கு அறிவிப்பு வெளியிட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, அரசு வழிகாட்டுதலின்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காலிமனையிடத்திற்கு 01.04.2022 முதல் பொது சொத்துவரி / காலிமனை இடத்திற்கு சீராய்வு மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண்.02 நாள்.11.04.2022–இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட மண்டல அடிப்படை மதிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**மண்டல மதிப்பீடு (சொத்துவரி) – 01.04.2022 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய சொத்துவரி வரிநிர்ணயம் உயர்வு சதவீதம்**

| மண்டலம் | தற்போதைய மதிப்பு (ரூபாய்) | 600 சதுரஅடி மற்றும் 600 சதுரஅடிக்கு குறைவாக உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 600 சதுரஅடி முதல் 1200 சதுரஅடி உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 1201 சதுரஅடி முதல் 1800 சதுரஅடி உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 75 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | 1800 சதுரஅடிக்கு மேல் உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவீதம் வரிஉயர்வு (ரூபாய்) | தொழிற்சாலைகள் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கட்டிடங்களுக்கு 75 சதவீதம் வரி உயர்வு (ரூபாய்) | வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு 100 சதவீதம் வரி உயர்வு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| A | 1.00 | 1.25 | 1.50 | 1.75 | 2.00 | 1.75 | 2.00 |
| B | 0.80 | 1.00 | 1.20 | 1.40 | 1.60 | 1.40 | 1.60 |
| C | 0.60 | 0.75 | 0.90 | 1.05 | 1.20 | 1.05 | 1.20 |
| D | 0.50 | 0.63 | 0.75 | 0.88 | 1.00 | 0.88 | 1.00 |

மண்டல மதிப்பீடு (காலியிடவரி)

| மண்டலம் | இரண்டாம் நிலை நகராட்சியில் காலிமனை வரி நிர்ணயம் தொகை (ரூபாய்) | தற்போது காலிமனை வரி பொது சீராய்வின்படி 01.04.2022 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொகை சதுரஅடிக்கு (ரூபாய்) |
|---|---|---|
| A | 0.10 | 0.20 |
| B | 0.15 | 0.30 |
| C | 0.20 | 0.40 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.02 நாள்.11.04.2022–இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பினை 01.04.2022 முதல் பொது சொத்துவரி / காலிமனை சீராய்வு மேற்கொள்ள மன்றம் ஊர்ஜிதம் செய்து தீர்மானிக்கலாம்.

(ந.க.எண். 1775/2022/அ1)

**தீர்மானம் எண். 17**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 24 வார்டுகளில் புதியதாக சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்பட்ட எண்களுக்கான பழைய சொத்துவரி விதிப்புகள் ரத்து செய்யப்படாமல் உள்ளதை நீக்கம் செய்யுமாறு வருவாய் உதவியாளர்கள் கோரியதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பட்டியல் உள்ள தொகைகள் நிலுவையில் இருந்து வருவதை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வருவாய் உதவியாளர் பெயர் | வரிவிதிப்பு களின் எண்ணிக்கை | சொத்துவரி தொகை ரூ. | திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ. (SUC) | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | பி.பழனி | 1 | 830 | 1140 | 1970 |
| 2 | 2 | பி.பழனி | 0 | 0 | 0 | 0 |
| 3 | 3 | பி.பழனி | 1 | 16160 | 1710 | 17870 |
| 4 | 4 | பி.பழனி | 1 | 1140 | 1140 | 2280 |
| 5 | 5 | பி.பழனி | 1 | 720 | 1140 | 1860 |
| 6 | 6 | பி.பழனி | 3 | 9060 | 2160 | 11220 |
| 7 | 7 | சொ.சரஸ்வதி | 2 | 9234 | 2346 | 11580 |
| 8 | 8 | பி.காளிதாஸ் | 1 | 1712 | 1140 | 2852 |
| 9 | 9 | பி.காளிதாஸ் | 0 | 0 | 0 | 0 |
| 10 | 10 | பி.பழனி | 56 | 158190 | 62880 | 221070 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | 11 | பி.காளிதாஸ் | 0 | 0 | 0 | 0 |
| 12 | 12 | வே.சுருளிச்சாமி | 6 | 8191 | 6840 | 15031 |
| 13 | 13 | வே.சுருளிச்சாமி | 5 | 8784 | 5700 | 14484 |
| 14 | 14 | வே.சுருளிச்சாமி | 10 | 28005 | 11400 | 39405 |
| 15 | 15 | வே.சுருளிச்சாமி | 35 | 90886 | 37620 | 128506 |
| 16 | 16 | பி.காளிதாஸ் | 13 | 24820 | 14820 | 39640 |
| 17 | 17 | பி.காளிதாஸ் | 4 | 6674 | 4560 | 11234 |
| 18 | 18 | பி.காளிதாஸ் | 14 | 60444 | 15960 | 76404 |
| 19 | 19 | வே.சுருளிச்சாமி | 56 | 237176 | 191430 | 428606 |
| 20 | 20 | சொ.சரஸ்வதி | 16 | 34741 | 18060 | 52801 |
| 21 | 21 | சொ.சரஸ்வதி | 14 | 68501 | 16530 | 85031 |
| 22 | 22 | வே.சுருளிச்சாமி | 25 | 66196 | 28680 | 94876 |
| 23 | 23 | வே.சுருளிச்சாமி | 13 | 28219 | 14820 | 43039 |
| 24 | 24 | சொ.சரஸ்வதி | 1 | 2450 | 1140 | 3590 |
| **மொத்தம்** | | | **278** | **862133** | **441216** | **1303349** |

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1156/2022/அ1)

**தீர்மானம் எண். 18**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி